பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 06 2026 TUESDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜனசங்க நிறுவனர் Dr. Shyama Prasad Mukherjee-யின் நினைவு தினத்தை முன்னிட்டு, குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.

2. மத்திய அரசுடன் இணக்கமாக செயல்பட தமிழக அரசு விரும்புவதாக முதலமைச்சர் திரு. விஜய் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

3. மத்திய சிறுபான்மையினர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

4. ஈரானில் உள்ள அணுஉலைகளை சர்வதேச முகமை ஆய்வு செய்ய அனுமதிக்கப்படும் என்ற அமெரிக்காவின் கருத்தை ஈரான் மறுத்துள்ளது.

5. உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி. ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

ஜனசங்க நிறுவனர் Dr. Shyama Prasad Mukherjee-யின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஷ்யாமா பிரசாத் முகர்ஜி, தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவராகவும், கல்வியாளராகவும் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் வளர்ச்சிக்காக Shyama Prasad Mukherjee தமது வாழ்க்கையை அர்ப்பணித்ததாக தெரிவித்தார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், ஒரே நாடு, ஒரே அரசியலமைப்பு, ஒரே தேசியக்கொடி என்ற தேசிய சிந்தனையை முன்நிறுத்தி, நாட்டின் ஒற்றுமைக்காக போராடிய Dr. Shyama Prasad Mukherjee-யின் தியாகமும், தேசப்பற்றும் நாட்டு மக்களுக்கு வழிகாட்டியாக திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

El Nino காரணமாக ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் El Nino பாதிப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டத்திற்குப் பின், சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், எந்தவொரு சூழலையும் எதிர்கொள்ள அரசு தயார் நிலையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பருவமழை குறைவு, மாற்றுப் பயிர்கள் மற்றும் எல் நினோ பாதிப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாப்பது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழக அரசு, மத்திய அரசுடன் இணக்கமாக செயல்பட விரும்புவதாக முதலமைச்சர் திரு. விஜய் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்துப் பேசிய அவர், மாநில அரசு தனக்கான உரிமையை எப்பொழுதும் விட்டுக்கொடுக்காது என்று உறுதிபடக் கூறினார்.

மும்மொழிக்கொள்கை, மேகதாது, கூட்டுக்குடிநீர் திட்டம் போன்ற விவகாரங்களில் தமிழக அரசு உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

*தமிழ் மொழி ஆட்சிமொழியாக இருக்கும் என்று கூறிய அவர். மத்திய அரசுடனான நித்தி ஆயோக் கூட்டத்தில், தமிழகத்திற்கான நிதியை தாம் வலியுறுத்தியதாக தெரிவித்தார்.*

*மருத்துவப் படிப்புகளுக்கு 12ஆம் வகுப்பு தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களே போதுமானது என்று தாம் குறிப்பிட்டதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.*

*தமிழகத்தில் இரண்டு எய்ம்ஸ் மருத்துவமனைகளை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாக அவர் கூறினார்.*

*மீனவர்களின் நலன்களை பாதுகாக்க உறுதி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும் திரு. விஜய் தெரிவித்தார்.*

*எதிர்க்கட்சியினர் தமது அரசு குறித்து உண்மைக்குப் புறம்பான தகவல்களை மக்களிடையே தெரிவித்து வருவதாக குற்றம் சாட்டிய அவர், முந்தைய அரசு முறைகேடுகளில் ஈடுபட்டதாக கூறினார்.*

*அதற்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், தமக்கு பேச அனுமதி அளிக்குமாறு பேரவைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்தார்.*

*இதற்குப் பின் அமளி தொடர்ந்ததை அடுத்து, பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், முதலமைச்சரின் பதிலுரைக்குப் பின்னர் அனுமதி வழங்கப்படும் என்று கூறினார்.*

*இதனையடுத்துப் பேசிய திரு. உதயநிதி ஸ்டாலின், ஆதாரம் இன்றி கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஏற்கத்தக்கதல்ல என்று தெரிவித்தார்.*

*பின்னர் பேசிய முதலமைச்சர் திரு. விஜய், முந்தைய அரசு மீதான குற்றச்சாட்டுகளை தொடர்ந்தார்.*

*இதனையடுத்து, திமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.*

*முதலமைச்சரின் உரைக்குப் பின், பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் மறுதேதி குறிப்பிடாமல் அவையை ஒத்தி வைத்தார்.*

*>>>>><<<<<*

*மத்திய சிறுபான்மையினர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.*

*அவரது ராஜினாமா கடிதத்தை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு ஏற்றுக் கொண்டுள்ளார்.*

*திரு. ஜார்ஜ் குரியனின் மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து, அவர் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.*

*>>>>><<<<<*

*சர்வதேச அளவிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில், பிரிக்ஸ் நாடுகள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.*

*புதுதில்லியில் நடைபெற்று வரும் பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர். உலகம் முழுவதும் மோதல்கள், பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற சூழல் காணப்படுவதாகவும், இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் கூடுதலான நடவடிக்கைகளை பிரிக்ஸ் நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.*

*பிரிக்ஸ் நாடுகளிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இந்த கூட்டம் முக்கியப் பங்காற்றும் என்றும் திரு. அஜித் தோவல் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*சர்வதேச ஒலிம்பிக் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.*

இந்நாளையொட்டி, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விளையாட்டுத்துறைக்கு உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

இந்தியாவுக்கு 230 மில்லியன் டாலர் மதிப்பிலான Howitzer பீரங்கிகளை வழங்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக, இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. Sergio Gor சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இருநாடுகளுக்கு இடையேயான பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு வலுவடைந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இந்த பீரங்கிகள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு உறுதுணையாக இருக்கும் என்று திரு. Sergio Gor கூறியுள்ளார்.

>>>>><<<<<

ஈரானில் உள்ள அணுஉலைகளை சர்வதேச முகமை ஆய்வு செய்ய அனுமதிக்கப்படும் என்ற அமெரிக்காவின் கருத்தை ஈரான் மறுத்துள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையேயான அமைதி ஒப்பந்தத்திற்குப் பிறகு, சர்வதேச அணுசக்தி முகமையின் அலுவலர்கள் ஈரானின் அணு உலைகளை ஆய்வு மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க துணை அதிபர் திரு. J.D. Vance அறிவித்திருந்தார்.

இருப்பினும், இதற்காக எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை என்று ஈரான் திட்டவட்டமாக கூறியுள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான அமைதி ஒப்பந்தத்திற்குப் பிறகு, ஈரான் மீதான வர்த்தக தடை 60 நாட்களுக்கு நீக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ஈரானின் கச்சா எண்ணெய், சர்வதேச சந்தையில் டாலர் மதிப்பில் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இஸ்ரேல் - லெபனான் இடையேயான அமைதி பேச்சுவார்த்தை, அமெரிக்க தலைநகர் வாஷ்ங்டனில் இந்த வாரம் நடைபெறுகிறது.

அமெரிக்காவின் சர்வதேச பாதுகாப்பு விவகாரங்கள் துறை உதவிச் செயலர் Dan Zimmerman மற்றும் Counsellor Dan Holler தலைமையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் இஸ்ரேல் - லெபனான் நாடுகளின் ராணுவ மற்றும் அரசியல் தலைவர்கள் கலந்து கொள்ளப்போவதாக கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யஹூ, லெபனான் அதிபர் Joseph Aoun ஆகியோருடன் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்க்கோ ரூபியோ பேசினார்.

இதனையடுத்து, லெபனான் பகுதியில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா முயற்சிகளை மேற்கொள்ள முடிவெடுத்துள்ளது.

>>>>><<<<<

பாகிஸ்தானின் Baloch மாகாணத்தில் நான்கு போராட்டக்காரர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதற்கு, பல்வேறு மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் நீதிமன்றம் இவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை எடுத்துள்ளதாக இந்த அமைப்புகள் கூறியுள்ளன.

எல்லை பாதுகாப்புப் படை வீரரின் கொலை தொடர்பான வழக்கில் *Mahrang Baloch* உள்ளிட்ட நான்கு போராட்டக்காரர்களுக்கு பாகிஸ்தானில் தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

பாகிஸ்தான் ஒரு தீவிரவாத நாடு என்றும், பலுசிஸ்தான் மாகாணத்தில் பாதுகாப்பு படையினர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் *Baloch* தேசிய முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

அம்மாகாணத்தில் பாதுகாப்பு படையினர் மனித உரிமை மீறல் செயல்களில் ஈடுபடுவதாக *Baloch* மனித உரிமை கவுன்சில் கூறியுள்ளது.

>>>>><<<<<

காங்கோவில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு எபோலா தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இந்நோயால், இதுவரை 267 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

நோயால் பாதிக்கப்பட்ட 371 பேர் தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

>>>>><<<<<

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி. ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் *Shiva Narwal* வெள்ளிப்பதக்கத்தையும், *Yug Pratap Singh Rathore* வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>><<<<<

ஆசிய கோப்பை வாலிபால் சாம்பியன் போட்டியின் 3வது லீக் ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இந்தியா 3-1 என்ற புள்ளிக்கணக்கில் சீன தைபே-யை வென்றது.

>>>>>END<<<<<